**<u>நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வாணியம்பாடி, திருப்பத்தூர் மாவட்டம்</u>**

**<u>முன்னிலை</u> : திருமதி. கா. ஸ்ரீபதி, B.A., L.L.B.,**

நீதித்துறை நடுவர், வாணியம்பாடி.

2026ம் ஆண்டு ஜூன் மாதம் 30 ஆம் நாள் செவ்வாய்கிழமை

<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண் 114/2021</u>

<u>CNR NO. TNTU09-005993-2021</u>

| வரிசை எண். | விளக்கம் | விவரங்கள் |
|---|---|---|
| 1. | குற்றமுறையிடுபவர் | அரசுக்காக காவல் ஆய்வாளர், வாணியம்பாடி நகர காவல் நிலையம். குற்ற எண். 295/2015. |
| 2. | எதிரிகள் | 1. பாலா @ பாலகிருஷ்ணன், த/பெ.இளங்கோவன், 2. மஹபூப், த/பெ.பாபு **(2ம் எதிரி மஹபூப் இறந்து விட்டதால் அவருக்கு எதிரான வழக்கு அற்று போய்விட்டது.)** |
| 3. | குற்றம் | இ.த.ச பிரிவுகள் 452, 324, 326. |
| 4. | சம்பவம் நடந்த தேதி | 22.08.2015 |
| 5. | முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட நாள். | 22.08.2015 |
| 6. | எதிரிகள் கைது செய்யப்பட்ட நாள் மற்றும் பிணையில் சென்ற விபரம் மற்றும் நாள் | A1, A2 – 23.08.2015 – 16.09.2015 |
| 7. | குற்றப்பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்ட நாள் | 26.10.2021 |
| 8. | கு.வி.மு.ச.பிரிவு 241-ன் கீழ் குற்றம் குறித்து வினவப்பட்ட நாள் | 09.12.2021 |
| 9. | கு.வி.மு.ச.பிரிவு 317-ன் கீழ் தாக்கல் செய்யப்பட்ட மனுக்களை தவிர மற்ற மனுக்கள் தாக்கல் செய்யபட்ட விவரம் அதன் முடிவுகள். | 1.05.09.2023 குவிமுச.பிரிவு 320-ன் கீழ் 6347/2023. |
| 10 | வழக்கின் சாட்சிகள் முதல் விசாரணை மற்றும் குறுக்கு விசாரணை செய்யப்பட்ட நாள் | அ.சா.1 – 05.09.2023<br>அ.சா.2 – அ.சா.5 – 04.10.2023<br>அ.சா.6 – 20.10.2023<br>அ.சா.7 – 15.11.2023<br>அ.சா.8, அ.சா.9 –19.06.2024 |

| | | |
|---|---|---|
| | | அ.சா.10, அ.சா.11 – 09.08.2024<br>அ.சா.12 – 27.01.2026<br>அ.சா.13 – 14.05.2026<br>அ.சா.14 – 16.06.2026 |
| 11 | எதிரிகளிடம் குற்றம் குறித்து கு.வி.மு.ச.313(1) (ஆ)–ன் கீழ் வினவிய நாள் | 29.06.2026 |
| 12 | எதிரிகள் மீது பிடியாணை வழங்கப்பட்ட நாள் மற்றும் திரும்ப பெறப்பட்ட நாள் | – |
| 13 | தீர்ப்பு பகரப்பட்ட நாள் | 30.06.2026 |
| 14 | தீர்வு | குவிமுச பிரிவு 248(1) கீழ் விடுதலை. |

**நீதித்துறை படிவம் எண்: 61**

புகார்தாரர் : அரசுக்காக காவல் ஆய்வாளர், நகர காவல் நிலையம்.

எதிரிகள் : 1. பாலா @ பாலகிருஷ்ணன், த/பெ.இளங்கோவன்,
2. மஹபூப், த/பெ.பாபு **(2ம் எதிரி மஹபூப் இறந்து விட்டதால் அவருக்கு எதிரான வழக்கு அற்று போய்விட்டது.)**

குற்றம் : இ.த.ச பிரிவுகள் 452, 324, 326.

முடிவு : இறுதியாக, அரசு தரப்பில் 1ம் எதிரிக்கு எதிரான இ.த.ச பிரிவுகள் 452, 324, 326 குற்றச்சாட்டுகள் ஆனது சந்தேகத்திற்கு இடம் இன்றி நிரூபிக்கப்படாததால் சந்தேகத்தின் பலன்களை எதிரிக்கு அளித்து எதிரியை இவ்வழக்கில் இருந்து விடுதலை செய்வது நீதியின் நலனுக்கு உகந்தது என்று இந்த நீதிமன்றம் தீர்மானித்து எதிரியை வழக்கிலிருந்து குவிமுச பிரிவு 248(1) கீழ் விடுதலை செய்து உத்தரவிட்டு தீர்ப்பளிக்கப்படுகிறது. **(2ம் எதிரி மஹபூப் இறந்து விட்டதால் அவருக்கு எதிரான வழக்கு அற்று போய்விட்டது.)**

| வ. எண் | எதிரிகள் பெயர் | தந்தை பெயர் | சாதி (அ) இனம் | தொழில் | முகவரி | வயது |
|---|---|---|---|---|---|---|
| 1 | பாலா @ பால கிருஷ்ணன் | இளங்கோவன் | இந்து | கூலி | சிவசெட்டி தெரு, அம்மூர்பேட்டை, வாணியம்பாடி | 31 |
| 2 | மஹபூப் | பாபு | முஸ்லிம் | கூலி | பஞ்சாயத்து போர்டு தெரு, ஜாப்ராபாத், வாணியம்பாடி | – |

| தேதி | | | | | | | தாமதம் (ம) அதன் விளக்கம் |
|---|---|---|---|---|---|---|---|
| குற்றம் | புகார் அறிக்கை | கைது செய்யப்பட்ட நாள் | பிணையில் சென்ற நாள் | விசாரணையின் தொடக்கம் | விசாரணையின் முடிவு | உத்தரவு | |
| 22.08.15 | 22.08.15 | A1, A2 – 23.08.2015 | A1, A2 – 16.09.2015 | 09.12.21 | 29.06.26 | 30.06.26 | – |

இவ்வழக்கானது 28.10.2021 அன்று இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு 29.06.2026 – ம் தேதியன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது குற்றமுறையிடுபவர் தரப்பில் கற்றறிந்த அரசு குற்றதுறை உதவி வழக்கறிஞர் நிலை 1 திருமதி.மகேஸ்வரி அவர்கள் ஆஜராகியும் எதிரிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.K.ரஞ்சித்குமார், B.Com., B.L, அவர்கள் ஆஜராகியும் இது நாள் வரை விசாரணை செய்தும் வழக்கின் சாட்சிகளின் சாட்சியங்கள் மற்றும் ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் இவ்வழக்கில் வழங்கிடும்

## தீர்ப்புரை

### 1.குற்ற இறுதி அறிக்கையின் சுருக்கம்:

இவ்வழக்கில் வாணியம்பாடி நகர காவல் நிலைய சரகத்திற்குட்பட்ட முகமது அலி பஜாரில் கடந்த 22.08.2015ம் தேதி மதியம் 01.15 மணிக்கு சாட்சி1க்கு சொந்தமான கண்ணா ஸ்டோர் கடையில் சாட்சி1 நாராயணராவ் சாட்சி2 ராஜேஷ்கண்ணா ஆகியவர்கள் இருந்தபோது TN 23 BR 1770 என்ற எண்ணுள்ள Hero Honda மோட்டார் சைக்கிளில் 1ம் எதிரி பாலா (எ) பாலகிருஷ்ணன், 2ம் எதிரி மஹபூப் இருவரும் கத்தியுடன் கடையினுள்ளே நுழைந்து 1வது எதிரி சாட்சி 1 நாராயணராவின் வலது முழங்கையின் மீது கத்தியால் அடித்து கொடுங்காயம் ஏற்படுத்தியும், 2வது எதிரி சாட்சி1ன் இடது கையிலும் தலையிலும் கத்தியால் அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியும், தடுத்த சாட்சி2 ராஜேஷ்கண்ணாவை எதிரிகள் இருவரும் அதே கத்தியால் வலது கை, இடது கைகளில் வெட்டி சொற்பகாயம் ஏற்படுத்தியுள்ளார்கள். எனவே, 1ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 452, 324, 326 ன் கீழும், 2ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 452, 324 ன் கீழும் தண்டிக்கத்தக்க குற்றம் புரிந்துள்ளதாக வாணியம்பாடி நகர காவல் நிலைய காவல் ஆய்வாளர் எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

2. எதிரிகள் மீது முகாந்திர வழக்கு இருப்பதால் இவ்வழக்கானது இந்நீதிமன்றத்தால் 1ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 452, 324, 326 ன் கீழும், 2ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 452, 324 ன் கீழும் கோப்பிற்கு எடுக்கப்பட்டு, எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்பப்பட்டது. இந்த வழக்கில் எதிரிகள் ஆஜரானதும் வழக்கில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணத்தின் நகல்கள் அனைத்தும் எதிரிகளுக்கு கு.வி.மு.ச. பிரிவு 207ன்படி இலவசமாக வழங்கப்பட்டது.

3. குற்றம்சாட்டப்பட்ட நபருக்கு போதிய கால அவகாசம் கொடுத்து, ஆவணங்களை பரிசீலித்தும் எதிரிகள் மீதான குற்ற செயல்களை விசாரிக்க போதுமான முகாந்திரம் இருந்த காரணத்தினால், 1ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 452, 324, 326 ன் கீழும், 2ம் எதிரி இ.த.ச. பிரிவுகள் 452, 324 ன் கீழான குற்றச்சாட்டுகள் வனைந்து விளக்கி கூற வினவியபோது, எதிரிகள் குற்றத்தை மறுத்துரைத்ததால் அரசு தரப்பு சாட்சிகள் விசாரணைக்கு உத்தரவிடப்பட்டது. **(2ம் எதிரி மஹபூப் இறந்து விட்டதால் அவருக்கு எதிரான வழக்கு அற்று போய்விட்டது.)**

4. அரசு தரப்பில் **அ.சா.1 முதல் அ.சா.14** வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். **அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.23** வரையிலான சான்றாவணங்கள் மற்றும் **சா.பொ.1 முதல் சா.பொ.3** வரையிலானவை குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5.அரசு தரப்பு சாட்சியங்களின் மூலம் தெரியவரும் அரசுதரப்பு வழக்கின் சுருக்கம் :**

5 (i) அ.சா.1 நாராயணராவ் இவ்வழக்கின் புகார்தாரர் ஆவார். அ.சா.1 நாராயணராவ் முகமது அலி பஜாரில் ஒரு பிரச்சனை ஏற்பட்டதால் எதிரிகள் இருவரும் கத்தியுடன் கடையினுள்ளே நுழைந்து 1வது எதிரி அ.சா.1ன் வலது முழங்கையின் மீது கத்தியால் அடித்து கொடுங்காயம் ஏற்படுத்தியும், 2வது எதிரி அ.சா.1ன் இடது கையிலும் தலையிலும் கத்தியால் அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியும், தடுத்த அ.சா.2 ராஜேஷ்கண்ணாவை எதிரிகள் இருவரும் அதே கத்தியால் வலது கை, இடது கைகளில் வெட்டி சொற்பகாயம் ஏற்படுத்தியதால் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக சேர்ந்துள்ளார். அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் உதவி ஆய்வாளர் அ.சா.11

திரு.லூர்துஜெயராஜ் அ.சா.1ஐ விசாரித்து அ.சா.ஆ.8 புகார் வாக்குமூலம் பதிவு செய்துள்ளார்.

5(ii) காவல் உதவி ஆய்வாளர், அ.சா.11 திரு.லூர்துஜெயராஜ் புகார் வாக்குமூலத்தை பதிவு செய்து அதற்கேற்ப நிலைய குற்ற எண் 295/2015 இ.த.ச பிரிவுகள் 147, 148, 452, 307 ன் கீழ் அ.சா.ஆ.9 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளார். பின்பு, 22.08.2015ம் தேதி 16.45 மணிக்கு சாட்சிகள் அ.சா.4 கார்த்திக் மற்றும் அ.சா.14 சுப்ரமணிராவ் ஆகியோர்கள் முன்னிலையில் அ.சா.ஆ.10 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.11 மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளார்.

5(iii) பின்னர், சாட்சிகள் அ.சா.1 நாராயணராவ், அ.சா.3 கோபி, அ.சா.4 கார்த்திக் அ.சா.5 சுபேர், அ.சா.6 மோகன்ராவ், அ.சா.7 உஷாபாய், அ.சா.12 சத்தியநாராயணா, அ.சா.14 சுப்ரமணிராவ், மற்றும், வெங்கடேசன் ஆகியோர்களை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். இச்சம்பவத்தில் பாலா மற்றும் மஹபூப் இரண்டு நபர்களும், தலைமறைவாக உள்ள எதிரி அக்பர் மற்றும் இச்சம்பவத்திற்கு உறுதுணையாக இருந்த சிவா, சரவணன் ஆகியோர்கள் தான் இச்சம்பவத்தில் ஈடுபட்டார்கள் என தெரியவந்ததால் எதிரிகளை தேடி வந்த நிலையில், 22.08.2015ம் தேதி காலை வாகன தணிக்கை செய்து கொண்டிருந்தபோது அவ்வழியாக வந்த ஹீரோ ஹோண்டா வாகனத்தில் வந்த இருவரை விசாரித்தபோது அவர்கள் இருவரும் முன்னுக்கு பின் முரணாக தங்கள் பெயர் விலாசத்தை கூறியதால் அவர்களை தீர விசாரித்ததில் இவ்வழக்கில் கண்டவாறு சம்பவத்தின் தொடர்பாக குற்றத்தை ஒப்புக்கொண்டவர்களை கைது செய்து 1ம் எதிரி பாலா (எ) பாலகிருஷ்ணனை 23.08.2015ம் தேதி காலை 07.00 மணி முதல் 07.45 மணிவரை அவ்வழியாக வந்த கிராம உதவியாளர் அ.சா.10 திரு. நாகராஜ் மற்றும் மகேந்திரன் முன்னிலையில் எதிரி பாலா (எ) பாலகிருஷ்ணன் தானாக முன்வந்து ஒப்புக்கொண்டு கொடுத்த அ.சா.ஆ.12 ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் கோபால் மற்றும் ராஜேந்திரன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். பின்னர் அதேநாள் காலை 07.45 மணிக்கு TN 23 BR 1770 என்ற Hero Honda Splendor வாகனம் மற்றும் வாகனத்தின் டேங்க் கவலரில் இருந்த சா.பொ.1 ரத்த கறை படிந்த வெள்ளை நிற சட்டை, சா.பொ.2 சுமார் 24 செ.மீ.

நீளமுள்ள கட்டை பிடி போட்ட கத்தி ஆகியவற்றை அதே சாட்சிகள் முன்னிலையில் அ.சா.ஆ.13 கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியுள்ளார். பின் 2ம் எதிரி மஹபூப் என்பவரிடம் அதே இடத்தில் 08.15 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் தானாக முன்வந்து ஒப்புக்கொண்டு கொடுத்த அ.சா.ஆ.14 ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார். அதே இடத்தில் அதே நாள் காலை 09.00 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் சா.பொ.3 சுமார் 24 செ.மீ. நீளமுள்ள உருளை கட்டை பிடி போட்ட கத்தி ஒன்றை அ.சா.ஆ.15 கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றியுள்ளார். பின்னர் கைப்பற்றிய வழக்கு சொத்துக்களான சா.பொ.1 முதல் சா.பொ3 வரையிலானவற்றை அ.சா.ஆ.16 மற்றும் அ.சா.ஆ.17 படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியுள்ளார். பின் சாட்சிகள் அ.சா.10 நாகராஜ் மற்றும் மகேந்திரன் ஆகியோரை தனித்தனியாக விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்துள்ளார். பின் வழக்கு கோப்பை மேல்விசாரணைக்காக காவல் ஆய்வாளர் அ.சா.13 திரு.சந்திரசேகரன் அவர்களின் பார்வைக்கு வைத்துள்ளார்.

5(iv) அ.சா.13 திரு.சந்திரசேகரன், காவல் ஆய்வாளர் அவர்கள் வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்டு வழக்கு கோப்பை பார்வையிட்டதில் சம்பவத்தில் காயம் அடைந்த அ.சா.2 ராஜேஸ்கண்ணா என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்யாமல் இருப்பது தெரியவந்ததால் அ.சா.2 ராஜேஸ்கண்ணாவை விசாரணை செய்ய சம்பவத்தில் 1 மற்றும் 2ம் எதிரிகள் மட்டுமே சம்மந்தப்பட்டதாகவும், மீதமுள்ள எதிரிகளுக்கு சம்மந்தம் இல்லை என்றும் எழுத்து மூலமாக எழுதிக்கொடுத்தும், வாக்குமூலமாகவும் கூறியதால் அ.சா.1 நாராயணராவ், அ.சா.3 கோபி,அ.சா.5 சுபேர், அ.சா.8 ரமேஷ். அ.சா.9 தினகரன் ஆகியோரை மீண்டும் விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்ததில் அ.சா.2 ராஜேஸ்கண்ணா கூறியது போலவே கூறியதால் அ.சா.ஆ.20 எதிரி நீக்கல் அறிக்கை மற்றும் அ.சா.ஆ.21 பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து காயம்பட்ட அசா.1 நாராயண ராவ் மற்றும் அ.சா.2 ராஜேஷ்கண்ணா ஆகியோருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. சிவசுப்ரமணியம் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து இருவருக்கும் சேர்ந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய அசா.ஆ.22 காயச்சான்றிதழ் பெற்றுள்ளார். வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரிகள்

மீதான குற்றம் உண்மையென தெரிய வந்ததால் 1 மற்றும் 2ம் எதிரிகள் மீது இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

6. அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட சாட்சிகளின் சாட்சியங்களில் இருந்தும் மற்றும் சான்றாவணங்களில் இருந்தும் குற்றம் சாட்டப்பட்ட நபர்களுக்கு பாதகமாக அமைந்ததை சாட்சிய சூழ்நிலைகளை எதிரிகளிடம் குவிமுச பிரிவு 313(i)(ஆ)–ன் கீழ் வினவியபோது எதிரிகள் மேற்படி சாட்சியங்கள் மற்றும் சான்றாவணங்கள் பொய் என கூறினார்கள். மேலும், எதிரிகள் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை மற்றும் சான்றாவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை.

<u>**இவ்வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில் அரசு தரப்பில், எதிரி மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் சம்பவத்தை தகுநிலை ஐயத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா என்பதேயாகும்**</u>

7. இவ்வழக்கில் கடந்த 22.08.2015ம் தேதி மதியம் 01.15 மணிக்கு சாட்சி1க்கு சொந்தமான கண்ணா ஸ்டோர் கடையில் அ.சா.1 நாராயணராவ் அ.சா.2 ராஜேஷ்கண்ணா ஆகியவர்கள் இருந்தபோது TN 23 BR 1770 என்ற எண்ணுள்ள Hero Honda மோட்டார் சைக்கிளில் 1ம் எதிரி பாலா (எ) பாலகிருஷ்ணன், 2ம் எதிரி மஹபூப் இருவரும் கத்தியுடன் கடையினுள்ளே நுழைந்து 1வது எதிரி அ.சா.1 நாராயணராவின் வலது முழங்கையின் மீது கத்தியால் அடித்து கொடுங்காயம் ஏற்படுத்தியும், 2வது எதிரி அ.சா.1ன் இடது கையிலும் தலையிலும் கத்தியால் அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியும், தடுத்த அ.சா.2 ராஜேஷ்கண்ணாவை எதிரிகள் இருவரும் அதே கத்தியால் வலது கை, இடது கைகளில் வெட்டி சொற்பகாயம் ஏற்படுத்தியுள்ளார்கள் என அரசு தரப்பில் 1 மற்றும் 2ம் எதிரிகளின் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

8. அ.சா.1 நாராயணராவ் தனது நீதிமன்ற விசாரணையின்போது, " **ஆஜர் எதிரியை தெரியாது. 2ம் எதிரி மெஹபூப்பை தெரியாது. 2015ம் வருடம் ஒரு நாள் முகமது அலி பஜாரில் ஒரு சிறு பிரச்சனை ஏற்பட்டது. என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது.** " என பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது " சம்பவம் பற்றி எனக்கு எதுவும் நேரடியாக தெரியாது

என்றும், பஜாரில் கூட்டமாக இருந்தபோது போலிசார் என்னிடம் வெள்ளை பேப்பரில் கையெழுத்து வாங்கிக்கொண்டுள்ளார்கள் என்றும், புகாரில் என்ன விவரம் எழுதியுள்ளது என்ற விவரம் தெரியாது என்றும், இந்த வழக்கு சம்மந்தமாக எந்த விவரமும் தெரியாது. " என்றும் சாட்சியமளித்துள்ளார்.

9. இவ்வழக்கில் கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 ராஜேஷ்கண்ணா, அ.சா.3 கோபி, அ.சா.5 சுபேர் தங்களது நீதிமன்ற விசாரணையின்போது, **" ஆஜர் எதிரியை தெரியாது. வழக்கு விவரம் எதுவும் தெரியாது. "** என அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்கள்.

10. மற்றொரு கண்ணுற்ற சாட்சியான அ.சா.7 உஷாபாய் தனது நீதிமன்ற விசாரணையின்போது, **" ஆஜர் எதிரியை தெரியாது. சம்பவத்தை குறித்து எனக்கு எதுவும் தெரியாது. "** என பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்.

11. மற்ற கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.8 ரமேஷ், அ.சா.9 தினகரன் தங்களது நீதிமன்ற விசாரணையின்போது, **" எதிரிகளை தெரியாது. இவ்வழக்கை குறித்து எதுவும் தெரியாது. "** என அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார்கள்.

12. மற்ற சாட்சிகளான அ.சா.6 மோகன்ராவ் தனது நீதிமன்ற விசாரணையின்போது, **" ஆஜர் எதிரியை தெரியாது. சம்பவத்தை குறித்து எனக்கு எதுவும் தெரியாது. "** என்றும், அ.சா.12 சத்தியநாராயணா தனது நீதிமன்ற விசாரணையின்போது, **" ஆஜர் எதிரியை தெரியாது. பிரச்சனை என்ன நடந்தது என்று தெரியாது. நான் ஊரில் அப்போது இல்லை. "** என்றும் பிறழ் சாட்சியமளித்துள்ளனர்.

13. பார்வை மகஜர் சாட்சியான அ.சா.4 கார்த்திக் தனது நீதிமன்ற விசாரணையின்போது, **" பார்வை மகசரில் உள்ள கையொப்பத்தை நான் எப்போது போட்டேன் என்று நினைவில்லை. தற்போது போலிசார் சொன்ன பிறகு தான் இவ்வாறு ஒரு கையொப்பம் போட்டதே தெரியவருகிறது. வழக்க விவரம் எதுவும் எனக்கு தெரியாது. "** என அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியம் அளித்துள்ளார். மற்றொரு பார்வை மகஜர் சாட்சியான அ.சா.14 சுப்ரமணியராவ் தனது நீதிமன்ற விசாரணையின்போது, **" வழக்கு**

**சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது. பார்வை மகசர் குறித்து எனக்கு எதுவும் தெரியாது. "** என பிறழ் சாட்சியமளித்துள்ளார்.

14. ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.10 நாகராஜ் தனது நீதிமன்ற விசாரணையின்போது, " கோணாமேடு பஸ் நிலையத்தில் நகர போலிசார் நின்று கொண்டிருந்தார்கள். நானும் தேவஸ்தானம் கிராம உதவியாளர் திரு. மகேந்திரனும் அந்த வழியாக சென்று கொண்டிருந்தபோது ஸ்ப்ளெண்டர் இருசக்கர வாகனத்தில் சென்ற நபர்களை விசாரித்து கொண்டிருந்தார்கள். அவர்கள் அதற்கு முன் தினம் பஜாரில் யாரோ ஒரு நபரை கத்தியால் குத்தி விட்டதாக விசாரணையில் தெரியவந்தது. அந்த வாகனம், வாகனத்தின் உறையிலிருந்து கத்தி, துணிகளை போலிசார் எடுத்து கொண்டார்கள். அங்கேயே கைப்பற்றுதல் மகசர் தயார் செய்து எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள்.மேற்படி போலிசார் விசாரித்த நபர்களை தற்போது 10 வருடம் ஆகிவிட்டதாலும், கண்பார்வை மங்கி விட்டதாலும் என்னால் அடையாளம் காட்ட இயலாது. " என சாட்சியமளித்துள்ளார். எதிரி தரப்பு குறுக்கு விசாரணையின்போது " கோணாம்பேட்டை பஸ் நிலையத்திடம் நான் போனதால் போலிசார் அங்கு என்னை விசாரித்தனர் என்றும், போலிசார் என்னிடம் பெயர், முகவரி போன்ற விவரங்களை கேட்டுக்கொண்டு தாளில் எழுதிக்கொண்டார்கள் என்றும், யாரிடமிருந்து பொருட்களை போலிசார் கைப்பற்றினார்கள், அவர்கள் யாரை என்ன செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றும், நான் கையெழுத்திட்ட தாளில் என்ன எழுதியுள்ளது என்ற விவரம் தெரியாது. " என அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியமளித்துள்ளார்.

15. அரசு தரப்பில் பட்டியல் சாட்சி 4, 12, 15 விசாரிப்பதிலிருந்து விலக்கப்பட்டுள்ளனர். அரசு தரப்பில் விசாரிக்கப்பட்ட இவ்வழக்கின் புகார்தாரர் அ.சா.1 நாராயணராவ், கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.7 உஷாபாய், சாட்சிகள் அ.சா.6 மோகன்ராவ், அ.சா.12 சத்தியநாராயணா, பார்வை மகஜர் சாட்சியான அ.சா.14 சுப்ரமணியராவ் ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காத நிலையில், பிறழ் சாட்சியாக பாவிக்கப்பட்டு நீதிமன்றத்தின் அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்ததில், அரசு தரப்பு வழக்கிற்கு வலுசேர்க்கும்

வகையில் எவ்வித சங்கதிகளும் வெளிக்கொணரப்படவில்லை. மேலும், கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 ராஜேஷ்கண்ணா, அ.சா.3 கோபி, அ.சா.5 சுபேர், அ.சா.8 ரமேஷ், அ.சா.9 தினகரன், பார்வை மகஜர் சாட்சியான அ.சா.4 கார்த்திக், ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.10 நாகராஜ் ஆகியோர் அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியமளித்துள்ளனர். ஆகையால், அ.சா.1 முதல் அ.சா.10, அசா.12 மற்றும் அ.சா.14 வரையிலானவர்களின் சாட்சியம் அரசு தரப்பில் எதிரிகள் மீதான குற்றச்சாட்டை நிரூபிக்க உகந்தது அல்ல என இந்நீதிமன்றம் கருதுகிறது.

16. இவ்வழக்கின் புலன் விசாரணை அதிகாரியான அ.சா.11 திரு.லூர்துஜெயராஜ், காவல் உதவி ஆய்வாளர், அவரது சாட்சியத்தில் வாணியம்பாடி அரசு மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பெயரில் அ.சா.1 நாராயணராவை விசாரித்து அ.சா.ஆ.8 புகார் வாக்குமூலத்தினைப் பெற்று அ.சா.ஆ.9 முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, சம்பவயிடத்தை பார்வையிட்டு சாட்சிகள் அ.சா.4 கார்த்திக் மற்றும் அ.சா.14 சுப்ரமணிராவ் ஆகியோர் முன்னிலையில் அ.சா.ஆ.10 பார்வை மகஜர் மற்றும் அ.சா.ஆ.11 மாதிரி வரைபடம் தயார் செய்ததை குறித்தும், சாட்சிகளை விசாரித்து தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்ததை குறித்தும், 1 மற்றும் 2ம் எதிரிகளை 22.08.2015ம் தேதி காலை கோணாமேடு பஸ் நிலையத்திடம் கைது செய்து சாட்சிகள் கிராம உதவியாளர் அ.சா.10 திரு. நாகராஜ் மற்றும் மகேந்திரன் முன்னிலையில் 1ம் எதிரி தானாக முன்வந்து கொடுத்த அ.சா.ஆ.12 ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து அதே இடத்தில் அதே நாள் காலை 07.45 மணிக்கு TN 23 BR 1770 என்ற Hero Honda Splendor வாகனம் மற்றும் சா.பொ.1 மற்றும் சா.பொ.2 ஆகியவற்றை அசா.ஆ.13 கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றியது குறித்தும், 2ம் எதிரி மஹபூப் என்பவரை அதே இடத்தில் 08.15 மணிக்கு அதே சாட்சிகள் முன்னிலையில் கைது செய்து 2ம் எதிரி தானாக முன்வந்து கொடுத்த அ.சா.ஆ.14 ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து சா.பொ.3 ஐ அசா.ஆ.15 கைப்பற்றுதல் மகசர் மூலம் கைப்பற்றி கைப்பற்றிய வழக்கு சொத்துக்களை அசா.ஆ.16 படிவம்91 மற்றும் அசா.ஆ.17 படிவம்91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பியதை குறித்தும், வழக்கு கோப்பை மேற்கட்ட விசாரணைக்காக அ.சா.13 சந்திரசேகரன், காவல் ஆய்வாளர் அவர்கள் வழக்கை

விசாரணைக்கு எடுத்துக்கொண்டு அ.சா.2 ராஜேஷ் கண்ணாவை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, அ.சா.1 நாராயணராவ், அ.சா.3 கோபி,அ.சா.5 சுபேர், அ.சா.8 ரமேஷ், அ.சா.9 தினகரன் ஆகியோரை மறுவிசாரணை செய்து, விசாரணையின் அடிப்படையில் அ.சா.ஆ.20 எதிரி நீக்கல் அறிக்கை மற்றும் அ.சா.ஆ.21 பிரிவு மாறுதல் அறிக்கை தயார் செய்து, காயம்பட்ட சாட்சிகளுக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு. சிவசுப்ரமணியம் என்பவரை விசாரித்து இருவருக்கும் சேர்ந்த விபத்து பதிவேட்டுடன் கூடிய அசா.ஆ.22 காயச்சான்று பெற்று புலன் விசாரணையை முடித்து இறுதி அறிக்கை தாக்கல் செய்து குறித்து சாட்சியம் அளித்துள்ளார் என்பது புலனாகிறது. அ.சா.11 மற்றும் அ.சா.13 ஆகியோரின் சாட்சியங்களை பரிசீலனை செய்கையில், தங்களது அரசு பணியை சட்டப்படியாக செய்ததை குறித்து சாட்சியம் அளித்துள்ளார்கள் என்பது புலனாகிறது.

17. அ.சா.1 நாராயணராவ் புகார் மனுவிலும், போலீசார் விசாரணையின்போதும், எதிரிகள் இருவரும் கத்தியுடன் கடையினுள்ளே நுழைந்து 1வது எதிரி அ.சா.1ன் வலது முழங்கையின் மீது கத்தியால் அடித்து கொடுங்காயம் ஏற்படுத்தியும், 2வது எதிரி அ.சா.1ன் இடது கையிலும் தலையிலும் கத்தியால் அடித்து சொற்பகாயம் ஏற்படுத்தியும், தடுத்த அ.சா.2 ராஜேஷ்கண்ணாவை எதிரிகள் இருவரும் அதே கத்தியால் வலது கை, இடது கைகளில் வெட்டி சொற்பகாயம் ஏற்படுத்தியதாக கூறிவிட்டு அதற்கு முற்றிலும் மாறாக, தனது நீதிமன்ற விசாரணையின்போது, அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக **ஆஜர் எதிரியை தெரியாது, வழக்கு சம்மந்தமாக எந்த விவரமும் தெரியாது** என பிறழ் சாட்சியம் அளித்துள்ளார். மேலும், அதற்கேற்றாற்போல், வழக்கு நிலுவையில் இருக்கும்போது 1ம் எதிரியும் அ.சா.1 நாராயணராவ்–ம் சமாதானம் ஆகிவிட்டதாக கொடுத்த 05.09.2023ம் தேதி கு.வி.மு.ச பிரிவு 320ன் கீழ் குற்ற பல்வகை மனு எண் 6347/2023ன் கீழ் தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி, மனுவானது இவ்வழக்கின் சில குற்றங்கள் சட்டப்படியாக சமரசம் தீர்த்துக்கொள்ள முடியாத குற்றங்கள் என்பதால் தள்ளுபடி செய்யப்பட்டது.

18. இவ்வழக்கில் புகார்தாரர் சாட்சியான அ.சா.1 நாராயணராவ் அவரது சாட்சியத்தில் அசா.ஆ1 புகார் மனுவில் உள்ள கையொப்பத்தை மட்டும் ஒப்புக்கொண்டு புகாரில் என்ன விவரம் உள்ளது என தெரியாது என சாட்சியம் அளித்துள்ளதால் வழக்கின் மூலஆதாரமான அ.சா.ஆ.8 புகார்வாக்குமூலமே சந்தேகத்திற்கு உள்ளாவதாலும், புகார்தாரரான அ.சா.1 நாராயணராவ் **ஆஜர் எதிரியை தெரியாது, வழக்கு சம்மந்தமாக எந்த விவரமும் தெரியாது** என பிறழ்சாட்சியம் அளித்துள்ளதாலும், அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள கண்ணுற்ற சாட்சிகள் அ.சா.7 உஷாபாய், சாட்சிகள் அ.சா.6 மோகன்ராவ், அ.சா.12 சத்தியநாராயணா ஆகியோர் **ஆஜர் எதிரியை தெரியாது. சம்பவத்தை குறித்து எனக்கு எதுவும் தெரியாது** என பிறழ் சாட்சியம் அளித்துள்ளதாலும், கண்ணுற்ற சாட்சிகளான அ.சா.2 ராஜேஷ்கண்ணா, அ.சா.3 கோபி, அ.சா.5 சுபேர், அ.சா.8 ரமேஷ், அ.சா.9 தினகரன் ஆகியோர் **எதிரிகளை தெரியாது. இவ்வழக்கை குறித்து எதுவும் தெரியாது** என அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியமளித்துள்ளதாலும், ஒப்புதல் வாக்குமூல சாட்சியான அ.சா.10 நாகராஜ் தனது சாட்சியத்தில் **யாரிடமிருந்து பொருட்களை போலிசார் கைப்பற்றினார்கள், அவர்கள் யாரை என்ன செய்தார்கள் என்ற விவரம் எனக்கு தெரியாது என்றும், நான் கையெழுத்திட்ட தாளில் என்ன எழுதியுள்ளது என்ற விவரம் தெரியாது** என அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியமளித்துள்ளதாலும், பார்வை மகஜர் சாட்சியான அ.சா.4 கார்த்திக் தனது சாட்சியத்தில் **பார்வை மகசரில் உள்ள கையொப்பத்தை நான் எப்போது போட்டேன் என்று நினைவில்லை என பிறழ் சாட்சியம் அளித்துள்ளதாலும்,** பார்வை மகஜர் சாட்சியான அ.சா.14 சுப்ரமணியராவ் தனது சாட்சியத்தில் **வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது** என அரசு தரப்பு வழக்கிற்கு முரணாக சாட்சியமளித்துள்ளதாலும், அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.10, அசா.12 மற்றும் அ.சா.14 ஆகியோர் அரசு தரப்பு வழக்கை வலுசேர்க்கும் வகையில் சாட்சியம் அளிக்காத நிலையில், புலன் விசாரணை அதிகாரிகளான அ.சா.11 மற்றும் அ.சா.13 ஆகியோரின் சாட்சியத்தை மட்டும் வைத்துக்கொண்டு 1ம் எதிரி குற்றம் புரிந்தார் என தீர்மானிக்க இயலாது என்பதாலும், அரசு தரப்பில் எதிரிகளின் மீது சுமத்தப்பட்ட இ.த.ச பிரிவுகள் 452, 324, 326 கீழான குற்றச்சாட்டுகள் அரசு தரப்பில் நிரூபணம் செய்யப்படவில்லை என்று மேற்கண்ட பிரச்சனைக்கு அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக தீர்வு காணப்படுகிறது.

19. **<u>முடிவாக,</u>** இவ்வழக்கின் 1ம் எதிரி மீதான இ.த.ச. பிரிவுகள் 452, 324, 326 ன் கீழான குற்றச்சாட்டுகளை பொறுத்து 1 ம் எதிரி குற்றவாளி இல்லை என முடிவு செய்து எதிரியை கு.வி.மு.ச பிரிவு 248(1)ன்படி விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. **(2ம் எதிரி மஹபூப் இறந்து விட்டதால் அவருக்கு எதிரான வழக்கு அற்று போய்விட்டது.)**

20. இவ்வழக்கில் சி.பி.181/2015ல் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கு சொத்தான TN 23 BR 1770 Hero Honda Splendor இருசக்கர வாகனத்தை என்ற இருசக்கர வாகனத்தை அதன் உரிமையாளரான மனுதாரர் மனு செய்து, சி.எம்.பி. எண்.4958/2015, நாள் 02.12.2015 என்ற உத்தரவின் மூலம் இடைக்காலமாக பெற்றுச் சென்றுவிட்டதை இவ்வழக்கின் மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு நிரந்தரமாக வைத்து கொள்ள உத்தரவிடப்படுகிறது. சா.பொ.1 ரத்த கறை படிந்த வெள்ளை நிற சட்டை, சா.பொ.2 சுமார் 24 செ.மீ. நீளமுள்ள கட்டை பிடி போட்ட கத்தி ஒன்று, சா.பொ.3 சுமார் 24 செ.மீ. நீளமுள்ள உருளை கட்டை பிடி போட்ட கத்தி ஒன்று மேல்முறையீட்டு காலத்திற்கு பின்னர் அழிக்க உத்தரவிடப்படுகிறது. 1ம் எதிரி எழுதி கொடுத்துள்ள பிணை பத்திரத்தை மேல்முறையீட்டு காலத்திற்கு பின் ரத்து செய்து உத்தரவிடப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் நேரடியாக தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் என்னால் பிழைநீக்கம் செய்து சரிபார்க்கப்பட்டு இன்று 2026-ம் ஆண்டு ஜூன் திங்கள் 30 ஆம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

(ஒம்/-கா. ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

<u>அரசு தரப்பு சாட்சிகள்</u>

| வ. எண் | அரசு தரப்பு சாட்சி எண் | சாட்சிகளின் பெயர்கள் | விளக்கம் |
|---|---|---|---|
| 1. | அ.சா.1 | திரு.நாராயணராவ் | வழக்கின் வாதி |
| 2. | அ.சா.2 | திரு. ராஜேஷ்கண்ணா | கண்ணுற்ற சாட்சி |
| 3. | அ.சா.3 | திரு.கோபி | கண்ணுற்ற சாட்சி |
| 4. | அ.சா.4 | கார்த்திக் | பார்வை மகசர் சாட்சி |

| | | | |
|---|---|---|---|
| 5. | அ.சா.5 | சுபேர் | கண்ணுற்ற சாட்சி |
| 6. | அ.சா.6 | மோகன்ராவ் | சம்பிரதாய சாட்சி |
| 7. | அ.சா.7 | உஷாபாய் | கண்ணுற்ற சாட்சி |
| 8. | அ.சா.8 | ரமேஷ் | கண்ணுற்ற சாட்சி |
| 9. | அ.சா.9 | தினகரன் | கண்ணுற்ற சாட்சி |
| 10. | அ.சா.10 | நாகராஜ் | ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகசர் சாட்சி |
| 11. | அ.சா.11 | லூர்துஜெயராஜ் | புலன் விசாரணை அதிகாரி |
| 12. | அ.சா.12 | சத்தியநாராயணா | சம்பிரதாய சாட்சி |
| 13. | அ.சா.13 | சந்திரசேகரன் | புலன் விசாரணை அதிகாரி |
| 14. | அ.சா.14 | சுப்ரமணியராவ் | பார்வை மகசர் சாட்சி |

**அரசு தரப்பு சான்றாவணங்கள்**

| வ. எண் | ஆவணத்தின் எண் | ஆவணங்களின் விளக்கம் | நிரூபித்தவர்/ சான்றளித்தவர் |
|---|---|---|---|
| 1. | அ.சா.ஆ.1 | 22.08.2015 ஆம் தேதியிட்ட புகார் வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் மட்டும் | அ.சா.1 |
| 2. | அ.சா.ஆ.2 | 05.09.2023 ஆம் தேதியிட்ட சமாதான மனு. | அ.சா.1 |
| 3. | அ.சா.ஆ.3 | 22.08.2015 ஆம் தேதியிட்ட பார்வை மகசரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் | அ.சா.4 |
| 4. | அ.சா.ஆ.4 | 23.08.2015 ஆம் தேதியிட்ட 1ம் எதிரி பாலா (எ) பாலகிருஷ்ணனின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் | அ.சா.10 |
| 5. | அ.சா.ஆ.5 | 23.08.2015 ஆம் தேதியிட்ட 2ம் எதிரி மஹபூப் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்திலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் | அ.சா.10 |
| 6. | அ.சா.ஆ.6 | 23.08.2015 ஆம் தேதியிட்ட 1ம் எதிரி பாலா (எ) பாலகிருஷ்ணனிடமிருந்து கைப்பற்றிய | அ.சா.10 |

| | | | |
|---|---|---|---|
| | | பொருட்களின் கைப்பற்றுதல் மகசரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் | |
| 7. | அ.சா.ஆ.7 | 23.08.2015 ஆம் தேதியிட்ட 2ம் எதிரி மஹபூப் என்பவரிடமிருந்து கைப்பற்றிய பொருட்களின் கைப்பற்றுதல் மகசரிலுள்ள முதலாவது சாட்சி கையொப்பம் | அ.சா.10 |
| 8. | அ.சா.ஆ.8 | 22.08.2015 ம் தேதியிட்ட புகார் வாக்குமூலம். | அ.சா.11 |
| 9. | அ.சா.ஆ.9 | 22.08.2015 ம் தேதியிட்ட முதல் தகவல் அறிக்கை | அ.சா.11 |
| 10. | அ.சா.ஆ.10 | 22.08.2015 ம் தேதியிட்ட பார்வை மகசர் | அ.சா.11 |
| 11. | அ.சா.ஆ.11 | 22.08.2015 ம் தேதியிட்ட மாதிரி வரைப்படம் | அ.சா.11 |
| 12. | அ.சா.ஆ.12 | 23.08.2015 ஆம் தேதியிட்ட 1ம் எதிரி பாலா (எ) பாலகிருஷ்ணனின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி. | அ.சா.11 |
| 13. | அ.சா.ஆ.13 | 23.08.2015 ஆம் தேதியிட்ட 1ம் எதிரி பாலா (எ) பாலகிருஷ்ணனிடமிருந்து கைப்பற்றிய பொருட்களின் கைப்பற்றுதல் மகசர். | அ.சா.11 |
| 14. | அ.சா.ஆ.14 | 23.08.2015 ஆம் தேதியிட்ட 2ம் எதிரி மஹபூப் என்பவரின் ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி. | அ.சா.11 |
| 15. | அ.சா.ஆ.15 | 23.08.2015 ஆம் தேதியிட்ட 2ம் எதிரி மஹபூப் என்பவரிடமிருந்து கைப்பற்றிய பொருட்களின் கைப்பற்றுதல் மகசர். | அ.சா.11 |
| 16. | அ.சா.ஆ.16 | 23.08.2015 ஆம் தேதியிட்ட படிவம் 91. | அ.சா.11 |
| 17. | அ.சா.ஆ.17 | 23.08.2015 ஆம் தேதியிட்ட படிவம் 91. | அ.சா.11 |
| 18. | அ.சா.ஆ.18 | TN 23 BR 1770 Hero Honda Splendor என்ற இருசக்கர வாகனத்தின் புகைப்படம். | அ.சா.11 |
| 19. | அ.சா.ஆ.19 | அதன் சிடி. | |

| | | | |
|---|---|---|---|
| 20. | அ.சா.ஆ.20 | 21.03.2019 ஆம் தேதியிட்ட எதிரி நீக்கல் அறிக்கை. | அ.சா.13 |
| 21. | அ.சா.ஆ.21 | 21.03.2019 ம் தேதியிட்ட சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை | அ.சா.13 |
| 22. | அ.சா.ஆ.22 | 06.06.2017 ம் தேதியிட்ட நாராயணன் மற்றும் ராஜேஷ்கண்ணா இருவருக்கும் சேர்ந்த விபத்து பதிவேட்டுடம் கூடிய காயச்சான்று | அ.சா.13 |
| 23. | அ.சா.ஆ.23 | 22.08.2015 ஆம் தேதியிட்ட பார்வை மகசரிலுள்ள இரண்டாவது சாட்சி கையொப்பம் | அ.சா.14 |

**அரசு தரப்பு சான்று பொருள்**

| வ. எண் | சான்று பொருள் வரிசை எண் | சான்று பொருள் விளக்கம் | நிரூபித்தவர்/ சான்றளித்தவர் |
|---|---|---|---|
| 1. | சா.பொ.1 | ரத்தக்கறை படிந்த வெள்ளை நிற சட்டை | அ.சா.11 |
| 2. | சா.பொ.2 | சுமார் 24 செ.மீ. நீளமுள்ள கட்டை பிடி போட்ட கத்தி ஒன்று. | அ.சா.11 |
| 3. | சா.பொ.3 | சுமார் 24 செ.மீ. நீளமுள்ள உருட்டு கட்டை பிடி போட்ட கத்தி ஒன்று. | அ.சா.11 |

**எதிரி தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றுப் பொருட்கள்** – இல்லை.

**எதிரி தரப்பு சான்றாவணம்** – இல்லை.

**குறிப்பு**

1) எந்த சாட்சியும் 3 முறைக்குமேல் நிறுத்தி விசாரிக்கப்படவில்லை.

2) வழக்கு விசாரணையின் போது எதிரி பிணையில் இருந்தார்.

3) முடிவு காவல் துறையினருக்கு தெரிவிக்கப்பட்டது.

(ஒம்/–கா. ஸ்ரீபதி)
நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.

//உண்மை நகல்//

SRIPATHI K
JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI
Digitally signed by SRIPATHI K
Location: TIRUPATHUR

நீதித்துறை நடுவர்,
வாணியம்பாடி.